தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13334/F/2023**

திரு.பா.ஸ்டீபன் ராஜ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சிவகாசி கோட்டம், .. பொது அதிகார அமைப்பு
விருதுநகர்-626123.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.பா.ஸ்டீபன் ராஜ் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.பா.சந்திரசேகரன், நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி கோட்டம், விருதுநகர் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 10.06.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 29.02.1962 அன்று இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலுகா, மங்களம் கிராமம் புல எண் 894/2C-க்கு நில எடுப்புக்காக இராமநாதபுரம் Special Deputy Collector Ramanathapuram at Madurai அவர்களால் நில எடுப்பு அரசு சாலைக்கு Award No: 41/62 அதற்கான நகல் என்பன போன்ற தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்

அவர்கள் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் பொதுத்தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகாசி அவர்களுக்கு மனுவினை மாற்றம் செய்துள்ளார். அதனைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 03.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 19.07.2023 தேதியிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 03.07.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும், இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் 10.06.2023 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள தகவல் தொடர்புடைய ஆவணங்களை மீண்டும் தேடிப் பார்த்து, கிடைக்கப்பெறும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை 19.08.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**
- **மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெறாதபட்சத்தில், அது குறித்துப் பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை தயார் செய்து மனுதாரருக்கு அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலினை 19.08.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 13334/F/2023**</u>
**பெறுநர்**
<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சிவகாசி கோட்டம்,
விருதுநகர்-626123.

<u>**மனுதாரர்**</u>
திரு.பா. ஸ்டீபன் ராஜ்,
எண் 5/144, மங்களம் (அ),
சிவகாசி வட்டம்,
விருதுநகர்-626138.

Copy to file: KR/PA